மாண்புமிகு திரு. சி, பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, Indicial Subordinate Service பொறுத்தவரையில், அதற்காகச் சில விதிமுறைகளை இயற்றாமல், 1968-லேயிருந்து கிட்டத்தட்ட 1979 வரை நடவடிக்கை எடுக்காமல் இருந்து விட்ட காரணத்தால்தான் அவர்கள் நிரந்தரமாக்கப்படாமலிருந் திருக்கிறார்கள். தற்போது அந்த விதிகள் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன. தற்போது அவர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிபதிகள் தனித் தன்மையைக் கருதி அவர்களை எடுத்த எடுப்பிலேயே நிரந்தரமாக வேலைக்குப் போட ஆவன செய்யப்படுமா என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தனித் தன்மை ஒன்றும் கிடையாது. ஆகவே, அடுத்து, திரு. எல். இளையபெருமாள்.

திரு. எல். இளையபெருமாள்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், 23 பேர் இரண்டாம் வகுப்பு மாஜிஸ் டிரேட்களாக நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள். அவர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். அதே சமயத்திலே மலைவாழ் மக்கள், ஷெடியூல்டு வகுப்பினர் இரண்டாவது வகுப்பு மாஜிஸ்டிரேட்டு களாக இருந்தும் அவர்கள் நிரந்தரமாக்கப்படவில்லையென்ற கோரிக்கை அரசுக்கு வந்திருப்பது உண்மையா? அப்படியிருந்தால் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? மேலும் அரசியல் சட்டத்தில் அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று ஒதுக்கப்பட்டிருக்கிற சதவீதம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிரந்தரமாக்கப்படுகின்றபொழுது கண்டிப்பாக கம்யூனல் ஜி. ஒ. கடைபிடிக்கப்படும். இது 1965 ஆம் ஆண்டிலிருந்தே இருந்து வருகிற பிரச்சினை என்பதைப் பலமுறை கூறினேன். அதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பல ஆண்டுகளாகத் தீர்க்கப்படாத இந்தப் பிரச்சனையைத் தீர்க்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

கூட்டுறத் துறையில் பணிபுரியும் இளநிலை, மற்றும் முதுநிலை ஆய்வாளர்கள்.

*வினா எண். 108 செல்வி வி. விசயலட்சுமி; மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவுத்துறையில் இளநிலை ஆய்வாளர்கள், முதுநிலை ஆய்வாளர்கள் என்பதற்குப் பதிலாக கூட்டுறவுத்துறை ஆய்வாளர்கள் என ஒரே தகுதியாக்க சந்தானம் கமிட்டியின் சிபாரிசு செயல்படுத்தப்படுமா?

1981 ஆகஸ்ட் 31]

(ஆ) இல்லையெனில் சிபாரிசினை மறு பரிசீலனை செய்து செயல்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) இந்த பரிந்துரையை அரசு ஆராய்ந்தது. நிர்வாக காரணங்களுக்காக இதை ஏற்பதற்கில்லை என அரசு முடிவு எடுத்துள்ளது.

(ஆ) மறு பரிசீலனை செய்யும் எண்ணம் இல்லை.

கோவை மத்திய கூட்டுறவு வங்கிகளில் பணிபுரியும் பட்டதாரி எழுத்தாளர்கள்

*வினா எண். 109 திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மத்திய கூட்டுறவு வங்கிகளில் அமர்த்தப்பட்ட பட்டதாரி எழுத்தர்களுக்கு ஆறு ஆண்டு காலமாக ஊதிய உயர்வு வழங்கப்படாதது பற்றி அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) ஆம்.

(ஆ) கூட்டுறவு பயிற்சி பெறாத 45 பட்டதாரி எழுத்தர்களையும் மாலை நேர கூட்டுறவுப் பயிற்சிக்கு அனுப்பி, அவர்கள் வகிக்கும் எழுத்தர் நிலை பதவிக்கு அவர்களை தகுதி உள்ளவர்களாக்கி ஊதிய உயர்வு அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[முற்பகல் 9-40]

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற மத்திய கூட்டுறவு வங்கிகளிலே எல்லாம் இம்மாதிரி கூட்டுறவுப் பயிற்சி பெறாத பட்டதாரி ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த கோவை மத்திய வங்கி ஊழியர்களுக்கு மட்டும் மறுக்கப்பட்டிருக்கிறது. இதன் காரணம் என்ன? அங்கே உள்ள தனி அதிகாரி அங்குள்ள தொழிலாளர்களை இரண்டு பிரிவினராகப் பிரித்து கொண்டிருக்கிறார். ஆகவே அவர் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி பொன்னையன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணுவதைப்போல இது கோவைக்கு மட்டுமே உரிய பிரசினை அல்ல; இப்படி உதவி ஆய்வர்களைப் பொறுத்தவரையிலும் எல்லா மாவட்டங்களிலும் அவர்கள் இருக்கிறார்கள்.

உதவி ஆய்வர்களில் இருந்து இளநிலை ஆய்வர்களாக ஆக வேண்டும் என்று ஒரு கோரிக்கை இருக்கிற காரணத்தினாலும் தட்டெழுத்துப் பிரிவினர்களும்கூட அந்தப் பதவி உயர்வுக்கு வர வேண்டும் என்ற கோரிக்கை வைத்திருக்கிற காரணத்தினாலும்,